தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண்: 214/மா/2022
நாள்: 19 .01.2023

திரு. இரா. மயில்சாமி, புதுவிளாங்குடி,
மதுரை – முறையீட்டு மனுதாரர்

உதவி ஆணையர், மண்டலம் –01,
மதுரை மாநகராட்சி, மதுரை. – எதிர்மனுதாரர்

மதுரை, புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, மனை எண்.05ல் வசிக்கும் திரு.இரா.மயில்சாமி என்பவரின் 19.10.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 20.10..2022–ல் பெறப்பட்டு 214/மா/2022 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனுதாரரது மனு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

மதுரை, புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, மனை எண்.05ல் வசிக்கும் திரு.இரா.மயில்சாமி என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள 19.10.2022 நாளிட்ட தனது மனுவில் :

" மதுரை மாநகராட்சி மண்டலம் 01, வார்டு 7, திருப்பாலை கிராமத்தில் உள்ள சின்ன கண்மாய் புல எண்.6/1, அரசு புறம்போக்கு நீர்நிலை பகுதியை ஸ்ரீராம் நல்லமணி பெண்கள் மேல்நிலைப்பள்ளி கல்வி நிறுவனம் ஆக்கிரமிப்பு செய்து பல கட்டிடங்கள் கட்டப்பட்டு உள்ளது. இரண்டு மாடி வரை உள்ளது. மேலும் உள்ளாட்சியின் 1997 சட்ட பிரிவின்படி உரிய அனுமதி பெறாமல் விதிகளை மீறி பள்ளி கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. இதே வளாகத்தில் ஆறுமுகம் நல்லமணி கல்வியியல் கல்லூரி (B.Ed.) சொந்த இடத்தில் புல எண். 6/11– இயங்கி வருகிறது. இக்கட்டிடங்களுக்கு வணிகத்திற்கான வரிவிதிப்பு செய்யவில்லை. சாதாரண மனைபிரிவுக்கு உண்டான சொத்து வரி வசூலிக்கப்படுகிறது. மேலும் உரிய கட்டிடங்களை தல ஆய்வு செய்து முழுமையாக அளந்து வரி வசூலிக்கவில்லை. இங்கு பணிபுரியும் ஆசிரியை மற்றும்

அலுவலர்களுக்கு தொழிலாளர் வரி மற்றும் தொழில் வரி வசூலிக்க தவறியதால், மாநகராட்சிக்கு வருவாய் இழப்பீடு ஏற்பட்டு வருகிறது. மேலும் ஸ்ரீராம் நல்லமணி பெண்கள் மேல்நிலைப்பள்ளி கல்வி நிறுவனம் அரசு புறம்போக்கு நீர்நிலை பகுதியை ஆக்கிரமிப்பு செய்து கட்டிடம் கட்டி உள்ளதால், இக்கண்மாயில் நீர் தேக்கி வைக்க முடியாததினால் ஆடு, மாடு, கால்நடைகளுக்கு தண்ணீர் கிடைப்பது மிகவும் அரிதாகிறது. இப்பகுதி மக்களுக்கு, நிலத்தடி நீர் குறைந்து கொண்டு வருவதால், குடிநீர் பற்றாக்குறை ஏற்பட்டுக்கொண்டு இருக்கிறது. மேலும், இக்கல்வி நிறுவனம் உரிய துறைகள் மூலம் உரிய அனுமதி பெறாமல் சட்டத்திற்கு புறம்பாக இயங்கும் ஸ்ரீராம் நல்லமணி பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் பயிலும் மாணவிகளை வேறு ஒரு பள்ளியில் சேர்க்கப்பட்டு இக்கட்டிடத்தை முழுமையாக இடித்து அகற்றிவிட்டு (Removed) ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட 4.96 ஏக்கர் இடத்தையும் அரசு கையகப்படுத்த உத்தரவிட்டும், மேற்படி ஆறுமுகம் நல்லமணி கல்வியியல் கல்லூரி (B.Ed.) மற்றும் ஸ்ரீராம் நல்லமணி பெண்கள் மேல்நிலைப்பள்ளி, பொது மக்கள், மாணவ மாணவியர் பயன்படுத்தும் கட்டிடம் என்பதால் தமிழ்நாடு பொது கட்டிடங்கள் உரிமம் சட்டம் 1965 பிரிவு 2(8)ன்படி (Section 2 (8) of the Tamil Nadu Public Buildings (Licensing) Act 1995)ன்படி முறையாக உரிமம் பெற்று முறைப்படி அவ்வப்போது புதுப்பிக்க வேண்டும். ஆனால் உரிமம் ஏதும் பெறவில்லை. மேலும், மேற்படி நிறுவனங்கள் பொது பயன்பாட்டு கட்டிடம் என்பதால் 1973 ஆம் ஆண்டைய தமிழ்நாடு நகர் ஊரமைப்புச்சட்டம் பிரிவு 33ன்படி (Directorate of Town and Country Planning) ஒப்புதல் பெறவில்லை. மேலும் இதற்கு வருவாய்த்துறையினரிடமும் அனுமதி பெறவில்லை. எனவே ஆறுமுகம் கல்வியியல் கல்லூரி (B.Ed) மற்றும் ஸ்ரீராம் பெண்கள் மேல்நிலைப்பள்ளி சட்டத்திற்கு புறம்பாக செயல்பட்டு வருவதால், நகர் ஊரமைப்பு சட்டம் 1971ன் பிரிவுகள் 56 மற்றும் 57 படி வளாகத்தை மூடுதல் மற்றும் முத்திரையிடுதல் (Lock and seal) போன்ற அமலாக்க நடவடிக்கை எடுக்க மதுரை மாநகராட்சி ஆணையருக்கு உத்தரவிடுமாறு மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களை வேண்டிக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 05.01.2023 அன்று நாகர்கோவில் முகாமில் நடைபெற்ற நேரடி விசாரணைக்கு ஆஜராகும்படி 21.12.2022 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

3. மனுதாரர் 05.01.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார் :

" மதுரை மாநகராட்சி, மண்டலம் –1(கிழக்கு) வார்டு எண்.7, திருப்பாலையில் இயங்கி வரும் ஸ்ரீராம் நல்லமணி யாதவா பெண்கள் மேல்நிலைப்பள்ளி கட்டடம் திருப்பாலை சின்னக்கண்மாய் சர்வே எண்.6/1 புறம்போக்கு நீர்நிலை பகுதியை ஆக்கிரமித்து செய்து கட்டப்பட்டுள்ளது. எந்தவொரு அனுமதியும் பெறாமலும், கட்டப்பட்டு இயங்கி வரும் அப்பள்ளியின் கட்டடத்திற்கான சொத்து வரியும் முறையாக கட்டப்படுவதில்லை. மேலும் வணிகக் கட்டிடத்திற்குண்டான (commercial) வரிக்கு பதிலாக குடியிருப்புக்கான வரியே அப்பள்ளி கட்டி வருகிறது. அதேபோன்று இங்கு பணிபுரியும் அனைத்து அலுவலர்களுக்கான தொழில் வரி வசூலிக்கப்படுவதில்லை எனவும் அங்கு கட்டப்பட்டுள்ள கட்டடத்திற்கு முறையான அனுமதி இல்லை எனவும் இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ்நாடு ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 56 மற்றும் 57ன் படி Lock and seal மற்றும் அகற்றம்

(remove) நடவடிக்கை எடுக்கவும் கேட்டுக்கொள்கிறேன். சொத்துவரி மற்றும் தொழில் வரி சரியானபடி பள்ளி நிறுவனத்திடம் வசூலிக்காததால், மாநகராட்சிக்கு பெருத்த வருவாய் இழப்பு ஏற்பட்டு வருகிறது. எனவே, சொத்து வரி மற்றும் தொழில் வரி சரியாக செலுத்தாத மற்றும் முறையான அனுமதி பெறாத கட்டடத்தின் மீது தேவையான நடவடிக்கை எடுத்திட ஆவன செய்யுாறு இம்முறைமன்றத்தைக் கேட்டுக்கொள்கிறேன். இந்நேர்வு தொடர்பான புகைப்படங்களை இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன். மேலும் இந்நேர்வு தொடர்பான எனது 14.10.2022 நாளிட்ட மனுவில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக பதிவு செய்து கொள்ளுமாறு இம்முறை மன்றத்தை வேண்டிக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

4) மதுரை மாநகராட்சி உதவி செயற்பொறியாளர் 05.01.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார் :

" மதுரை மாநகராட்சி மண்டலம் 1 (கிழக்கு) வார்டு எண்.7, கதவு எண்.29 சி 40 குருநகர் திருப்பாலை முகவரியில் இயங்கி வரும் நல்லமணி பெண்கள் பள்ளியானது அரசு உதவிப் பெறும் பள்ளி என்பதால் சொத்துவரி விதிப்பு ஏதும் செய்யப்படவில்லை. மேலும் மேற்கண்ட பள்ளிக்கு தொழில் வரி 2021–22 வரை நிலுவையின்றி வசூலிக்கப்பட்டுவிட்டது என்றும், மேலும் அருள்மிகு நல்லமணி என்ற கல்லூரி நிறுவனத்திற்கு இரண்டு வரிவிதிப்புகள் உள்ளது. வரிவிதிப்பு எண். 115/007/901542, வரி விதிப்பு எண்.115/007/904790–க்கு ரூ.5,72,287/– வரித்தொகை நிலுவையாகவும், மற்றொரு வரிவிதிப்பு எண்.115/007/901542க்கு ரூ.21,88,450/– வரித்தொகை நிலுவையாகவும் உள்ளது. மேற்படி கல்லூரி நிறுவனத்தினால் தொடரப்பட்ட வழக்கு எண். O.S. No.46/2021 நிலுவையில் உள்ளதால், கல்லூரி நிறுவனத்திற்குரிய சொத்து வரி கல்லூரி நிர்வாகத்தினரால் செலுத்தப்படாமல் நிலுவையாக உள்ளது என்கின்ற விவரத்தை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் மனுதாரர் தனது மனுவில் தெரிவித்துள்ள இடத்தை ஆய்வு செய்ததில், ஸ்ரீராம் நல்லமணி கல்வி நிறுவனம் அமைந்துள்ள இடம் திருப்பாலை கிராமம் புல எண்.6/1 கிராம கணக்கில் சின்ன கண்மாய் என தாக்கலாகியுள்ளதால், கண்மாயை பராமரித்து வரும் பொதுப்பணித்துறையிடம் மேற்கண்ட இடத்தை உரிய புல தணிக்கை செய்து ஆக்கிரமிப்பு தொடர்பான விவரங்களை அளிக்குமாறு பொதுப்பணித்துறை கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. பதில் இன்னும் கிடைக்கப்பெறவில்லை என்பதை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்" என பதிவு செய்துள்ளார்.

5) மனுதாரரது புகார் மனு, வாக்குமூலம் மற்றும் மதுரை மாநகராட்சி உதவி செயற்பொறியாளரின் வாக்குமூலம், ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

மதுரை, புதுவிளாங்குடியைச் சேர்ந்த திரு R. மயில்சாமி என்பவர் மதுரை மாநகராட்சி மண்டலம்–1 (கிழக்கு) வார்டு எண்.7, திருப்பாலையில் உள்ள ஸ்ரீராம் நல்லமணி பெண்கள் மேல்நிலைப்பள்ளி, சின்னக்கண்மாய் சர்வே எண்.6/1 பரப்பளவு 4 ஏக்கர், 96 செண்டில் உள்ள புறம்போக்கு நீர்நிலை பகுதியை ஆக்கிரமித்து கட்டடம் கட்டப்பட்டு இயங்கி வருவதாகவும் அதனை அகற்ற நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளார்.

மனுதாரர் 05.01.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் " மேற்கண்ட பள்ளியானது எந்தவொரு அனுமதியும் பெறாமலும் இயங்கி வரும் அப்பள்ளியின் கட்டிடத்திற்கு சொத்துவரி முறையாக கட்டவில்லை எனவும் , அங்குபணிபுரியும் அனைத்து அலுவலர்களுக்கான தொழில் வரி வசூலிக்கப்படுவதில்லை எனவும் தெரிவித்துள்ளார். மனுதாரர் திருப்பாலை கிராமத்தில் உள்ள சின்னகண்மாய் புல எண்.6/1ல் அரசு புறம்போக்கு நீர்நிலை பகுதியை ஸ்ரீராம் நல்லமணி பெண்கள் மேல்நிலைப்பள்ளி கட்டப்பட்டு இயங்கி வருவதாகவும் அதற்கான புகைப்பட ஆதாரத்தை இணைத்துள்ளார். மேலும் நல்லமணி கல்வியிடங்களுக்கு வணிகத்திற்கான வரிவிதிப்பு செய்யவில்லை எனவும், அங்கு பணிபுரியும் ஆசிரியை மற்றும் அலுவலர்களுக்கு தொழில் வரி வசூலிக்கவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார். ஆனால் இதற்கான எந்தவித ஆதார ஆவணங்களை இம்முறைமன்றத்தில் மனுதாரர் சமர்ப்பிக்கவில்லை.

மதுரை மாநகராட்சியின் உதவி செயற்பொறியாளர் தன்னுடைய வாக்குமூலத்தில் மேற்கண்ட பள்ளியானது அரசு உதவிப்பெறும் பள்ளி என்பதால் சொத்துவரி விதிப்பு செய்யப்படவில்லை எனவும் அருள்மிகு நல்லமணி என்ற கல்லூரிக்கு இரண்டு வரி விதிப்புகளான 115/007/901542 க்கு ரூ.21,88,450/–ம் வரிவிதிப்பு எண். 115/007/9047490க்கு ரூ. 5,72,287/–ம் நிலுவையாக இருப்பதாகவும் இதற்கு காரணம் அக்கல்லூரி தொடுத்த வழக்கு எண்.46/2021 நிலுவையில் இருப்பதே என்று தெரிவித்துள்ளார். மேலும் மேற்கண்ட கல்வி நிறுவனம் அமைந்துள்ள இடம் திருப்பாலை புல எண். 6/1 கிராம கணக்கில் சின்ன கண்மாய் என தாக்கலாகியுள்ளதால், பொதுப்பணித்துறையின் மூலம் உரிய புல தணிக்கை செய்து விவரங்களைஅளிக்குமாறு கோரப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார். ஆனால் அரசாணை எண்.639 வருவாய் (.மு.உ.(2)) துறை 27.11.2010 நாளிட்ட ஆணையில் ஸ்ரீராம் நல்லமணி பெண்கள் மேல்நிலைப்பள்ளிக்கு மேற்குறிப்பிட்ட புல எண்.6/1ல் 4.96 ஏக்கர் நிலத்தை அரசு 2.9.2006 முதல் 15 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது எனவும் அரசாணை பத்தி 9ல் பின்வருமாறு அரசு ஆணையிட்டுள்ளது.

மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் பரிந்துரையை பரிசீலித்தும் மற்றும் முதன்மைச் செயலர் மற்றும் நில நிருவாக ஆணையரின் முந்தைய அறிக்கையினை பரிசீலித்தும் ஸ்ரீராம் நல்லமணி யாதவா மகளிர் மேல்நிலைப்பள்ளியில் பயிலும் சுமார் 1500 மாணவியர்களின் எதிர்கால நலனை கருத்திற்கொண்டும், மேற்படி நிலம் மேற்படி பள்ளிக்கு ஏற்கனவே குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளதை கருத்திற்கொண்டும், தற்போது மேற்படி குத்தகை நீட்டிப்பு செய்வதற்கு வகைப்பாடு மாற்றம் அவசியமில்லை என்ற கருத்தின் அடிப்படையிலும், சின்னக்கண்மாய் நிலப்பரப்பு பூமியின் கண்மாயாக இல்லாதிருப்பதையும், கடந்த 25 ஆண்டுகளாக மேற்படி பள்ளி அதே இடத்தில் நடைபெற்று வருவதை கருத்திற்கொண்டும், இதனை ஒரு சிறப்பு நேர்வாகக் கருதி மதுரை மாவட்டம், மதுரை வடக்கு வட்டம், திருப்பாலை கிராமம் புலம் எண்.6/1ல் 4.96 ஏக்கர் பரப்பில் ஸ்ரீராம் நல்லமணி யாதவர் மகளிர் மேல்நிலைப்பள்ளிக்கு (அரசு உதவி பெறும் பள்ளி) ஏற்கனவே வழங்கப்பட்ட 9 ஆண்டுகால குத்தகை 1.9.2006ல் முடிவடைந்த நிலையில் மேற்படி குத்தகையை 2.9.2006 முதல் மேலும் 15 ஆண்டுகளுக்கு அவ்வப்போது நிலவும் சந்தைமதிப்பு அல்லது வழிகாட்டி பதிவேட்டின்படியான மதிப்பு இதில் எது அதிகமோ அதில் 7% மதிப்பில் (வணிகமற்ற நோக்கம்) மூன்றாண்டுகளுக்கொருமுறை குத்தகை தொகை மாற்றி அமைக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனை விதித்து வருவாய் நிலை ஆணை 24 (ஏ) ன் கீழ் உள்ள வழக்கமான

நிபந்தனைகளுடன் கீழ்காணும் சிறப்பு நிபந்தனைகளையும் விதித்து குத்தகை நீட்டிப்பு வழங்கி ஆணை வெளியிடப்படுகிறது: -

<u>சிறப்பு நிபந்தனைகள்:</u>

(i) குத்தகை எந்த நோக்கத்திற்காக வழங்கப்படுகிறதோ அதற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

(ii) ஆண்டுக் குத்தகை தொகையை தவறாமல் செலுத்தப்பட வேண்டும்.

(iii) குத்தகைத்தொகை மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை உயரும் சந்தை மதிப்பின் அடிப்படையில் திருத்தி அமைக்கப்பட வேண்டும்.

(iv) குறிப்பிட்ட புலத்தின் ஏதாவது ஒரு பகுதியோ/முழுமையாகவோ கேட்பு நிறுவனத்திற்கு எதிர்காலத்தில் தேவை இல்லை எனில் அதனை அரசுக்கு மீள ஒப்படைக்க வேண்டும்

(v) வருவாய் நிலை ஆணை 24(ஏ)ல் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகள் மீறப்படுமேயானால் குத்தகையை ரத்து செய்து அரசு குத்தகை நிலத்தை மீள எடுத்துக் கொள்ளும்

(vi) வருங்காலங்களில் அரசு அவ்வப்போது குத்தகை குறித்து வெளியிடும் பொதுவான ஆணைகள்/அறிவுறுத்தங்கள் மற்றும் நிபந்தனைகளுக்கு கேட்பு நிறுவனம் கட்டுப்பட வேண்டும்."

ஆனால் மேற்கண்ட அரசாணைபற்றி மதுரை மாநகராட்சியின் உதவி செயற்பொறியாளர் தன்னுடைய வாக்குமூலத்திலோ அல்லது அறிக்கையிலோ தெரிவிக்கவில்லை. மேலும் இப்பள்ளி கட்டடம் அமைந்துள்ள இடத்தினை தல ஆய்வு செய்யவில்லை என்பது வருத்தமளிக்கிறது.

மேற்கண்ட நிகழ்வில், விசாரணைக்குப்பின் இம்முறைமன்றம் பின்வருமாறு ஆணையிடுகிறது:

மேற்கண்டப்பள்ளி இயங்கும் இடம் கிராம கணக்கில் புல எண் 6/1 என்பது புறம்போக்கு இடம் என்பது மதுரை மாநகராட்சி மண்டலம் –01 (கிழக்கு) அலுவலர்களுக்கு தெரியாமல் இருப்பது வியப்பு அளிப்பதாக இம்முறைமன்றம் கருதுகிறது. மனுதாரர் இம்முறைமன்றத்திற்கு மனு அளித்த பின்பு தல ஆய்வு செய்ய நடவடிக்கை எடுத்திருப்பது மிகவும் கண்டிக்கத்தக்கது. மனுதாரர் மனு அளித்தவுடன் மதுரை மாநகராட்சி மண்டலம் –01 (கிழக்கு) அலுவலர்கள் கள ஆய்வு செய்து நடவடிக்கை எடுத்திருந்தால், இவ்வாறான புகார் மனுக்களை தவிர்க்கலாம் என இம்முறைமன்றம் சுட்டிக்காட்ட விரும்புகிறது. மேலும் தொழில் வரி எத்தனை பணியாளர்களிடம் வசூலிக்கப்பட்டது என்பதும் தெரிவிக்கவில்லை. வசூலிக்கப்பட்ட தொகை குறைவாக உள்ளதாக இம்முறைமன்றம் கருதுகிறது. எனவே அப்பள்ளியில் பணிபுரியும் எல்லா பணியாளர்களிடமும் தொழில் வரி வசூலிக்கப்பட்டதா என்பதை உறுதி செய்யுமாறு மதுரை மாநகராட்சியின் மண்டலம்–01(கிழக்கு) உதவி செயற்பொறியாளரை இம்முறைமன்றம் அறிவுறுத்துகிறது. அவ்வாறு இல்லையெனில், எந்த வருடங்களிலிருந்து வசூல் செய்யப்பட வேண்டுமோ அவ்வருடத்திலிருந்து தொழில் வழி வசூல் செய்யவும் இம்முறைமன்றம் அறிவுரை வழங்கி ஆணையிடுகிறது.

மேலும், மேற்கண்ட அரசாணையில் அப்பள்ளிக்கான குத்தகை 02.09.2006 முதல் மேலும் 15ஆண்டுகளுக்கு குத்தகை நீட்டிப்பு வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது. இவ்வாணையின்படி குத்தகை காலம் 02.09.2021 அன்றுடன் முடிவடைகிறது என்பது தெரிய வருகிறது. மேற்கண்ட பள்ளிக்கு 02.09.2021க்கு பிறகு குத்தகை நீட்டிப்பு அரசால் வழங்கப்பட்டுள்ளதா என்பது தெரியவில்லை. எனவே, இப்பள்ளிக்கு 02.09.2021க்கு பிறகு குத்தகை நீட்டிப்பு வழங்கப்பட்டுள்ளதா என்பதை கண்டறிந்து அவ்வாறு நீட்டிப்பு வழங்கப்படவில்லையென்றால், உரிய சட்டபூர்வமான நடவடிக்கை எடுக்குமாறு, மதுரை மாநகராட்சி ஆணையர் அவர்களுக்கு பரிந்துரை செய்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

மேலும், அருள்மிகு நல்லமணி கல்லூரி தொடர்ந்த வழக்கு நிலுவையில் உள்ளதாலும், இவ்வழக்கு சம்பந்தமாக எந்தவொரு தடையாணையையும் (Stay Order) இல்லாத நிலையிலும், அவ்வழக்கை விரைந்து முடிக்கவும், வரிவசூலை பெறவும் சம்பந்தப்பட்ட சட்ட ஆலோசகருடன்கலந்து ஆலோசித்து, உரிய சட்ட நடவடிக்கை எடுத்து நிலுவையில் உள்ள வரியை வசூலிக்க எல்லாவித சட்டப்பூர்வ தொடர் நடவடிக்கைகளையும் எடுக்குமாறு மதுரை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்றம் அறிவுரை வழங்கி ஆணையிடுகிறது.

கல்லூரி நிர்வாகம் தொடர்ந்த வழக்கை காரணம் காட்டி வரி வசூல் செய்யாமல் இருந்த சம்மந்தப்பட்ட அலுவலர்களை பொறுப்பாக்கி அவர்களின் மீது உரிய கடுமையான ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறு மதுரை மாநகராட்சி ஆணையருக்கு பரிந்துரைத்து இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

மேலும் மதுரை மாநகராட்சியின் உதவி செயற்பொறியாளர் தன்னுடைய வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளவாறு, மேற்கண்ட புல எண்.6/1ன் அறிக்கையை பொதுப்பணிதுறையிடம் பெற்று அரசாணை (நிலை) எண்.639, வருவாய் (நி.மு.உ. 2 (2) துறை நாள் 27.11.2010ல் ஆணையிட்டவாறு, மேற்கண்ட பள்ளியானது புல எண் 6/1ல் 4.96 ஏக்கரில் மட்டும் செயல்படுகிறதா அல்லது ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்து மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்துடன் இணைந்து உரிய சட்டபூர்வ நடவடிக்கை எடுக்குமாறு மதுரை மாநகராட்சி ஆணையருக்கு அறிவுரை வழங்கி இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

மேற்கண்ட இம்முறைமன்ற ஆணையின்படி எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்த அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பிவைக்குமாறு மதுரை மாநகராட்சி ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

Pendency of a Court case without any specific stay order or clear direction from the Court would not disable the action that should be taken by the Corporation. In this case non collection of property tax from the Nallamani Group of Institutions for so many years reflects poorly on the Corporation officials who have wantonly defaulted in recovering the Property Tax from the

Institutions by citing the ongoing court case which is only silent collusion and complicity resulting in the heavy loss of revenue due to the Corporation Hence, the Corporation Commissioner is directed to recover the Property Tax for all the years due, with immediate effect charging penalty also for the enormous delay in remittance of the same. Severe disciplinary action should be initiated against all delinquent officials involved in this grave omission and lapse. Commercial slab of tax should be imposed instead of such residential categories.

Professional Tax should be also collected proportionately in accordance with the manpower working in the Institutions by appropriate calculations to ensure fair realization of revenue to the Local Body.

The Corporation should verify whether proper planning approval has been obtained for construction of the buildings on the campus and if so whether they are in accordance with the plan approval directions. If deviations are noticed, necessary penal action should be launched as per the Town and Country Planning Act and the Madurai Corporation Building Rules. An enquiry may be held by the Corporation into the role of the Local field officials of the Corporation for negligence of supervision in this regard and suitable disciplinary action should be initiated effectively. The Director of Muncipal Administraton, should keep a close vigil over the execution of the Forum's directions and send an action taken report within 2 months.

**2023**–ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் **19**–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்
**1)**திரு. இரா.மயில்சாமி,
த/பெ. இராமலிங்கம்,
மனை எண்.**5**, அய்யப்பன் தெரு,
செம்பருத்தி நகர்,
புதுவிளாங்குடி,
மதுரை – **625 018.**

**2)**மாவட்ட ஆட்சியர்,
மாவட்ட ஆட்சியரகம்,
மதுரை–**625 001.**

3)ஆணையர்,
மதுரை மாநகராட்சி அலுவலகம்,
அறிஞர் அண்ணா மாளிகை,
தல்லாகுளம்,
மதுரை – 625 002.

4) உதவி ஆணையர்,
மதுரை மாநகராட்சி,
மதுரை.

5)நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.

6)இணை இயக்குநர்
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளருக்காக